வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 02.12.2024 திங்கட்கிழமை இதழ் : 336 பக்கங்கள் : 12

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# மாகாண சபை முறைமை முடிவுக்கு கொண்டுவரப்படும்!

## அநுர தலைமையிலான அரசு அறிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 02

**இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்கு கொண்டு வரவும், புதிய அரசியலமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.**

சுமார் 37 வருடகாலமாக நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமையால் நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான பலனும் இதுவரையில் கிடைக்கவில்லை. மாறாக இலங்கையில் அநாவசியமான பிரச்னைகளை தோற்றுவிக்கும் வகையிலான நிலைமையே காணப்படுகிறது. எனவே சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்னைகளை தோற்றுவிக்காத வகையிலான அரசியல் ரீதியிலான தீர்வுத் திட்டத்தை எமது அரசாங்கம் முன்வைக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதாக கூறிய 11

# இலங்கை - சீன உறவுகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம்

## சீன ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 02

சீனாவும் இலங்கையும் நெருக்கமான உயர்மட்ட பரிமாற்றங்களைப் பராமரித்து, பல்வேறு துறைகளில் ஆழமான ஒத்துழைப்புகளை முன்னெடுத்து வருகிறது. ஒரு பாதை ஒரு மண்டலம் முன்முயற்சியின் ஊடாக இலங்கை பல்வேறு வகையிலும் பயனடைகிறது என தெரிவித்துள்ள சீன ஜனாதிபதி ஷீ ஜின் பிங், இத்தகைய இரு தரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகளின் ஊடாக சர்வதேச மற்றும் பிராந்திய 11

# அமைச்சர் சாவித்திரி போல் ராஜ் மன்னார் மாவட்டத்துக்கு விஜயம்

மன்னார், டிசெ. 02

மன்னார் மாவட்டத்துக்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் நேற்று விஜயம் செய்தார்.

இதன்போது மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்த அமைச்சர் உலர் உணவுப் பொதிகளை வழங்கினார். 11

### இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை:

# கடற்றொழில் அமைச்சரை புதனன்று சந்திக்கிறார் இந்தியத் தூதர் சந்தோஷ்!

கொழும்பு, டிசெ. 02

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா எதிர்வரும் புதன்கிழமை கொழும்பில் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்னை தொடர்பில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

விசேடமாக, இந்திய மீனவர்கள் அத்துமீறல்களில் ஈடுபடுவதன் காரணமாக தொடர்ச்சியான கைதுகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, அமைச்சர் 11

# வடக்கு மாகாண முதலீட்டாளர்கள் மன்றத்தை உருவாக்க நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர்கள் மன்றத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ் வணிகர் கழகப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

யாழ் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ். நகரில் அமைந்துள்ள புதிய சந்தைக் கட்டடத் தொகுதியில் மிக நீண்ட காலமாக பயன்பாடில்லாது இருக்கும் தளத்தை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு வாடகை 11

# மாவீரர்தினம் அனுஷ்டிப்பால் பாதுகாப்புக்கு குந்தகமில்லை!

## கூறுகிறார் பாதுகாப்புச் செயலாளர்

கொழும்பு, டிசெ. 02

வடக்கு-கிழக்கில் உயிர்த்த தமது உறவுகளை நினைவேந்தும் நிகழ்வுகளை முன்னெடுத்தமையால் தேசிய பாதுகாப்புக்கு எவ்விதமான அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற விமானப்படையின் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். துய்யகொந்த தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை முன்னிலைப்படுத்தி 11

# தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடியோரிடம் விசாரணை!

யாழ்ப்பாணம், டிசெ. 02

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாடப்பட்ட சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில், 11

# இலங்கையிலுள்ள புதிய அரசின் நடைமுறைகள் சாதகமானவை!

## பிரிட்டன் பாராட்டு



லண்டன், டிசெ. 02

இலங்கையின் கடந்தகால அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் புதிய இலங்கை அரசாங்கத்தின் நடைமுறைகள் சாதகமானவை என பிரிட்டன் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்கான செயலாளர் டேவிட் லாம்மி தெரிவித்துள்ளார். 11

# பெப்ரவரி 15 இற்கு முன் உள்ளூராட்சித் தேர்தல்!

## மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 02

எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட 11

# சேமமடு வாள்வெட்டில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 02

வவுனியா ஓமந்தை சேமமடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை குறித்த பகுதியில் மாடுகளை மேய்த் துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது 11

# காஸ் வாகனத்தை நேற்று சுற்றிவளைத்தனர் மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 02

கடந்த ஒரு மாத காலமாக லாப்ஸ் எரிவாயு விநியோகம் முற்றாக தடைப்பட்ட நிலையில் நேற்று விநியோகம் இடம்பெற்றதால் மக்கள் எரிவாயுவை வாங்குவதற்காக அலைமோதினர்.

அதன்படி பருத்தித்துறை வியாபார நிலையங்களுக்கு லாப்ஸ் எரிவாயு சிலிண்டர் தாங்கிய வாகனம் வந்ததையடுத்து, மக்கள் வாகனத்தை 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதுமலையில் இடம்பெற்ற விபத்தில் பிறப்பு, இறப்பு பதிவாளர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணம், சுதுமலை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பிறப்பு, இறப்பு பதிவாளர் ஒருவர் உயிரிழந்தார்.

மானிப்பாய் வீதி, தாவடி கிழக்கு, கொக்குவில் பகுதியைச் சேர்ந்த அன்னலிங்கம் செந்தில் குமரேசன் (வயது -64) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் குறித்த நபர் மானிப்பாயில் இருந்து மோட்டார் சைக்கிளில் வரும் போது எதிரே வந்த கார் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்பின்னர் அம்புலன்ஸுக்கு அறிவித்த போதிலும் 30 நிமிடங்களின் பின்னரே குறித்த இடத்துக்கு அம்புலன்ஸ் வந்த நிலையில் காயமடைந்த நபரை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் உயிரிழந்தார்.

உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டு சென்றிருந்தால் அந்த நபரை காப்பாற்றியிருக்கலாம் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இவரது சடலம் மீதான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இந்த விபத்து குறித்த விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-5)

# கிளிநொச்சி நெல் வயல்களில் 'மடிச்சுக்கட்டி' நோய் தாக்கம்

கிளிநொச்சி, டிசெ. 02

சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் நெல் வயல்களில் 'மடிச்சுக்கட்டி' என சொல்லப்படுகின்ற நெல் இலைச்சுருட்டி நோய் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2024ம் ஆண்டு கால போக நெற்செய்கை, குளங்களின் கீழான நெற்செய்கை, மற்றும் மானாவாரி நெற்செய்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

70 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நிலவிய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தின் கீழ் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் மடிச்சுக்கட்டி நோயினால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதிகரித்த நோய்த்தாக்கம் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த போகங்களிலும் தாம் நஷ்டத்தை எதிர்கொண்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நோயைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)



# கிளிநொச்சி அரச அதிபரை சந்தித்தார் சிறீதரன் எம்.பி.!

கிளிநொச்சி, டிசெ. 02

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

குறிப்பாக, வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இடருதவிகளை வழங்குதல், இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் உள்ளிட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டிருந்தது.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்படவேண்டியுள்ள உள்ளக வீதிகளைச் சீரமைத்தல் குறித்தும், அடுத்த ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த சந்திப்பில், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலக கடற்றொழிலாளர் விழா குருநகரில் நேற்று நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 02

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் உலக கடற்றொழிலாளர் விழா நேற்று இடம்பெற்றது.

குருநகர் தொழிலாளர் இளைப்பாறு மண்டபத்தில், குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்தி சங்கத் தலைவர் யூலியன் சகாயராஜாவின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணாநாதன் இளங்குமரன், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன், யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன், குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அடிகளார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஷ (அ)

# வவுனியா குளத்தின் வான் பாயும் இடத்தில் குவிந்து வரும் மீன்கள்!

வவுனியா, டிசெ. 02

வவுனியா குளத்தின் வான் பாயும் இடத்தில் நீருடன் பெருமளவான மீன்களும் வருவதனால் அதனை போட்டி போட்டு மக்கள் பிடித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

வவுனியாவில் பெய்த கடும் மழை காரணமாக பல குளங்கள் வான் பாய்ந்து வருவதுடன் அதில் வவுனியா நகரை அண்டியுள்ள பிரதான குளமான வவுனியா குளமும் வான் பாய்ந்து வருகிறது.

இந்த வான் பாயும் நீருடன் குளத்து மீன்களும் பெருமளவில் வருவதால் நுளம்பு வலை, மீன் வலை, துணி, வேட்டி என்பவற்றை கொண்டு மக்கள் மீன்களை போட்டி போட்டு பிடிப்பதை அவதானிக்க முடிகிறது.

சிலாப்பியா, யப்பான், விரால், கெளிறு போன்ற பெருமளவான மீன்கள் பிடிக்கப்படுவதுடன், அதனை பிடித்துச் செல்பவர்கள் மகிழ்ச்சியில் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. (அ)

# வெள்ளப்பேரிடர் பாதித்த மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்

## சமத்துவக் கட்சி கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 02

மழை வெள்ளத்தினால் பேரிடரைச் சந்தித்துள்ள மக்களுக்கு உடனடி உதவிகளும் நிவாரணமும் வழங்கப்பட வேண்டும். அரசாங்கம் இதற்கான முதற்கட்ட நடவடிக்கையை எடுத்திருப்பது பாராட்டுக்குரியது. ஆனாலும் கவனிக்க வேண்டிய பணிகள் இன்னும் உள்ளன என்று சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர்முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் ஒரு வாரம் தொடர்ச்சியாகப் பெய்த பெருமழையினால் லட்சக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பல இடங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்கிறது. இதனால் பரந்தன், கொடிகாமம், வடமராட்சி கற்கோவளம் உள்ளிட்ட பல இடங்களில் மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உடனடி உதவிகளோடு இழப்பீடுகள் மதிப்பிடப்பட்டு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். இவர்கள் தொற்று நோய்த் தாக்கத்துக்கு உட்படக் கூடிய அபாயமும் உள்ளது. மேலும் இந்தப் பிரதேசங்களில் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் சேதத்தைச் சந்தித்துள்ளன. மீனவர்களும் கடந்த ஒரு வாரமாக தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

ஆகவே இவற்றை முறையாக மதிப்பீடு செய்து உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தத்தைத் தவிர்க்கக் கூடியவாறான நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்-

வெள்ள அனர்த்தத்துக்குப் பிரதான காரணமாக இருப்பது சீரான வடிகாலமைப்பு இல்லை என்பதேயாகும். வடக்கில் போருக்குப் பிந்திய அபிவிருத்திப் பணிகளின்போது சீரான வடிகாலமைப்பை மேற்கொள்வதற்கு பொறுப்பானவர்கள் தவறியுள்ளனர். கட்டிடங்கள், மதில் போன்றவற்றை அமைப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதிகளில் வடிகாலமைப்புப் பற்றிய கவனம் செலுத்தப்படவில்லை என்பது


அவதானிக்கப்பட்டுள்ளது. செல்வாக்கின் அடிப்படையில் வழங்கப்பட்ட அனுமதிகளால் இவ்வாறான இடர்ப்பாடுகள் இப்போது ஏற்பட்டுள்ளன என்று பகிரங்கமாகவே பலராலும் குற்றம் சாட்டப்படுகிறது. வடமாகாண சபை நிர்வாகம் இதில் கூடிய கனத்தைச் செலுத்தியிருக்கவேண்டும்.

அதேவேளை அதிகரித்த மணல் அகழ்வுகள், நிர்மாணப்பணிகளின்போது பொருத்தமான அமைவிடங்கள் தெரிவு செய்யப்படாமை போன்றனவும் வெள்ள அர்த்தத்துக்குப் பெருங் காரணங்களாகும். ஆகவே இவற்றைச் சரிசெய்வதுடன், எதிர்வரும் காலத்தில் இவ்வாறான தவறுகள் நடக்காத வகையில் உரிய அதிகாரிகளும் அதிகாரத் தரப்பினரும் நடந்து கொள்வது அவசியமாகும். பொறுப்பான இடங்களில் உள்ளவர்கள் விடுகின்ற தவறுகளால் மக்களே பாதிப்பைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே மக்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருப்போர் இந்த நிலையைக் குறித்துக் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். புதிய அரசாங்கம் இந்த விடயங்களில் உரிய நடவடிக் கையை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இதேவேளை மக்களும் மக்கள் அமைப்புகளும் கூட இந்த நிலைமைகளைக் குறித்து விழிப்புடன் செயற்படுவது அவசியமாகும். முற்கூட்டிய சரியான நடவடிக்கைகளே

எப்போதும் பாதிப்புகளிலிருந்து எமது மக்களையும் எமது பிரதேசங்களையும் பாதுகாக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்கல்



யாழ்ப்பாணம், டிசெ. 02

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 500 உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

தொழிலதிபர் ஈ. எஸ். பி. நாகரத்தின் நிதியுதவியில் இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஈழத்துச் சிதம்பரத்தின் மாணிக்கவாசகர் மடத்தில் சமைக்கப்பட்ட உணவு, பொதிகளாக்கி பிட்டியல முன்பள்ளி, சுவாமி கோவிலடி, கோவளம், பெரியவடைப்பு, சுன்னாகம், சிவன்கோவிலடி, மல்லிகையடி போன்ற பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டன.

நேற்றுடன் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் இவ்வாறு உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.12.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அநுர அரசாங்கம் தரப்போவது

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்கப் போவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார் என செய்திகள் வெளியாகியிருக்கின்றன. புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டு வருவதில் வெற்றிபெற்றால், 13ஆவது திருத்தச்சட்டம் சாதாரணமாகவே இல்லாமல் போய்விடும். அதன் பின்னர், புதிய அரசியல் யாப்பு என்ன நோக்கத்துக்காக கொண்டுவரப்படப் போகின்றது என்பதைத் பொறுத்தே விடயங்கள் அமையும்.

ஜே.வி.பின் தலைவர் றோகண விஜயவீர, 1970களில், தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை ஆதரித்தார். 1982 ஜனாதிபதித் தேர்தலில் அந்த நிலைப்பாட்டை முன்வைத்தே விஜயவீர போட்டியிட்டார். தேர்தலில் அவர் எதிர்பார்த்தவாறு வாக்குகள் கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தமைதான், விஜயவீரவின் பின்னடைவுக்கு காரணம் என்னும் பார்வை மேலெழுந்தது. அதன் பின்னரான காலப்பகுதியில் விஜயவீரவோ, அவரது அரசியல் சீடர்களோ தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை ஒருபோதும் அங்கீகரித்துப் பேசியதில்லை. தென்னிலங்கையின் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமாயின், சிங்கள - பௌத்த மேலாதிக்க கருத்துடன் ஒத்துப்போக வேண்டும் என்னும் அரசியல் அணுகுமுறையைதான், ஜே.வி.பியினதும் பிரதான அணுகுமுறையாக இருந்தது. இந்தக் காலத்தில், தென்னிலங்கையின் ஏனைய கட்சிகளை விடவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவரீதியில் அழித்தொழிக்கவேண்டும் என்பதில் ஜே.வி.பியே முன்னணி வகித்தது. 2002இல், மேற்கொள்ளப்பட்ட நோர்வே - அனுசரணை சமாதான உடன்பாட்டையும் ஜே.வி.பி கடுமையாக எதிர்த்தது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்த ஜே.வி.பி, அதன் விளைவான அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று வாதிட்டுவந்தது. அதனை இல்லாதொழிப்பதற்கான வாய்ப்பு தற்போது அவர்களுக்கு கிடைத்திருக்கின்றது. அதற்கு அவர்கள் முயற்சித்தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை ஆனால் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் புதிய அரசியல் யாப்பின் ஊடாக, அநுர அரசாங்கம் தமிழ் மக்களுக்குத் தரப்போவது என்ன? 13ஆவது திருத்தத்தையும் விட உயர்ந்ததா அல்லது இருப்பதையும் இல்லாமலாக்கும் வகையில் குறைவான ஒன்றா? தமிழ் மக்கள் வழங்கிய வாக்கிற்கு, அநுர அரசாங்கம் வழங்கப் போகும் கைமாறு இருப்பதையும் பிடுங்குவதானோ?

உண்மையிலேயே ஜே.வி.பி இடதுசாரித்துவ மரபில் உருவாகிய ஓர் இயக்கம்தான் என்றால், தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, வடக்கு, கிழக்கை தமிழ் மக்களின் தாயகமாக ஏற்றுக்கொண்டு, பௌத்த மதத்திற்கு வழங்கப்படும் முன்னுரிமையை இல்லாமாலாக்கி, அனைத்து மதங்களும் அரசியலமைப்பின் கீழ் சமன் என்னும் நிலைமையை உருவாக்கினால் மட்டுமே, அநுர அரசாங்கம் ஒரு முற்போக்கு அரசாங்கம் என்பதை நாம் ஏற்கலாம். 'சிஸ்டம் சேஞ்ஜ்' என்று கூறிக்கொண்டு சிறிலங்காவின் அடிப்படையான சிங்கள - பௌத்த அரசியல் கட்டமைப்பில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாமல், சில ஓட்டைகளை அடைக்கும் அரசியலை முன்னெடுக்கப் போகின்றது என்றால், அதன் உண்மையான நோக்கம் தமிழ் மக்களுக்கு இருப்பதையும் இல்லாமலாக்குவதுதான்.

ரில்வின் சில்வாவின் இந்த நிலைப்பாடு தொடர்பில் மலையக தமிழரான இராமலிங்கம் சந்திரசேகரன், கிழக்கிலங்கை தமிழரான அருண் ஹேமச்சந்திரா - அதேபோன்று, யாழ்ப்பாணத்தில் தெரிவான தமிழ் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு என்ன? இதற்குத்தான் நீங்கள் தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்த்தீர்களா? இதுதான் உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு, நீங்கள் வழங்கப் போகும் பிரதியுபகாரமா?

# குருநகரில் துறைமுகம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், டிசெ. 02*

குருநகர் பிரதேச மக்களின் நீண்ட கால கோரிக்கையாக உள்ள இந்தப் பிரதேசத்துக்கான துறைமுகத்தை அமைப்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் ஊடாக கலந்துரையாடி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.



குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் உலக கடற்றொழிலாளர் விழா குருநகர் தொழிலாளர் இளைப்பாறு மண்டபத்தில் நேற்று காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது,

"விவசாயம் மற்றும் கடற்றொழில் வடக்கு மாகாணத்தின் முக்கியமான தூண்கள்.

இந்தப் பிரதேச மக்களின் அபிவிருத்திக்காக யாழ். மாவட்டச் செயலராக நான் பணியாற்றிய காலத்தில் பல்வேறு விடயங்களைச் செய்திருக்கின்றேன். அன்றும் இன்றும் உங்கள் பிரதேசத்தின் பிரதேச செயலராக இருக்கின்ற சா. சுதர்சனும் இதில் முக்கிய பங்காற்றியிருக்கின்றார்.

கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்ற இராமலிங்கம் சந்திரசேகர், எமது பிரதேசத்தின் மேம்பாடு தொடர்பில் அக்கறையுள்ளவர். அவர் பலவற்றை உங்களுக்காகச் செய்வார்.

கடந்த காலத்தில் உங்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தப் பகுதிக்கு துறைமுகம் அமைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டபோதும் அது சாத்தியமாகவில்லை. அதன் தேவைப்பாட்டை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் கடற்றொழில் அமைச்சருடன் இணைந்து அதைச் செயல்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்"- என்றார். (எ-2-5)

# யாழ்ப்பாணத்தில் கிணற்று நீருடன் மலக்குழி கழிவுநீர் கலக்கும் அபாயம்

### கொதித்தாறிய நீரே பாதுகாப்பானது

*யாழ்ப்பாணம், டிசெ. 02*

கொட்டித் தீர்த்த மழை கிணறுகளின் நீரின் தரத்தைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. பெருக்கெடுத்த வெள்ள நீர் கிணறுகளை நிரப்பியுள்ளதோடு, பல இடங்களில் மலக்குழிக் கழிவு நீர் கிணற்று நீருடன் கலக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கொதித் தாறிய நீரைப் பருகுவதே பாதுகாப்பானது என தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தின் தலைவர் பொ. ஐங்கர நேசன் தெரிவித்தார்.

வடக்கு அதன் வருடாந்த சராசரி மழை வீழ்ச்சியான 1240 மில்லி மீற்றர் மழையை ஒக்ரோபர் மாதம் முடிவடைவதற்கு முன்பாகவே பெற்றிருந்த நிலையிலேயே பெங்கால் புயல் 720 மில்லி மீற்றர் மழையை மேலதிகமாகக் கொண்டு வந்து கொட்டியது.


ஏற்கனவே நிலம் அதன் நீர்க் கொள்ளளவை எட்டியிருந்த நிலையில் இம் மேலதிக மழைநீர் போக்கிடமின்றி வெள்ளக்காடாக உருவெடுத்ததில் நீர்நிலைகள் மாசடைந்துள்ளன.

வெள்ள நிவாரணப் பணிகளில் நான் ஈடுபட்டிருந்த போது பல்வேறு பகுதிகளிலுமுள்ள கிணறுகளில் மலக் குழிக் கழிவுநீர் கலக்கும் அபாயம் என்னால் உணரப்பட்டுள்ளது.

கிணறுகளில் குளோரின் இட்டுத்தொற்று நீக்குவதும், கிணற்று நீரை இறைப்பதும் அவசியமானவை. எனினும் இவை மாத்திரமே பாதுகாப்புக்குப் போதுமானவை யல்ல.

வெடிப்புகளையும் துளைகளையும் கொண்ட மயோசின் சுண்ணாம்புப் பாறைகளினூடாக கிணற்றுக்குள் கசியும் நிலத்தடி நீர் இன்னும் சில வாரங்களுக்கேனும் கிருமிகளைக் காவி வரும் அபாயம் உள்ளதால் கொதித்து ஆறிய நீரே முழுப்பாதுகாப்புக்கான உத்தரவாதமாகும் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ- 05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 02 திங்கட்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 17
நல்ல நேரம் :6.00 - 7.30
ராகு காலம் :7.30-9.00
திதி : துவிதியை




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்து கொடுத்து போவது நல்லது.

**இடபம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். தாயாரின் உடல் நலம் சீராகும். கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.

**மிதுனம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடை வீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
உங்களை சுற்றியிருப் பவர்களின் சுயரூபம் தெரிய வரும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நட்பால் ஆதாயம் உண்டு. கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தாயாருக்கு மருத்துவ செலவுகள் அதிகமாகும். உயரும் நாள்.

**கன்னி**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புதுவாகனம் வாங்கு வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் விலகும். மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். செலவு களை குறைக்க திட்டமிடுவீர்கள். உடல் நலம் சீராகும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். மற்றவர்களுக்காக நியாயம் கேட்கப் போய் பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**தனுசு**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். பிள்ளைகளின் பிடிவாதத்தை அனுசர ணையான பேச்சால் சரி செய்யுங்கள். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்று வீர்கள். வெளிவட் டாரத்தில் அந்தஸ்து உயரும் எதிர்பாராத சந்திப்பு நிகழும். மதிப்பு கூடும் நாள்.

**கும்பம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். வாகன வசதி பெருகும். மற்றவர்களின் சாதித்துக் காட்டும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள்.

# முல்லைத்தீவில் 23, 930 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில்

**பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடன் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்**

முல்லைத்தீவு, டிசெ. 02

முல்லைத்தீவு மாவட்டத்தில் 23, 930 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை கனமழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். பரணீகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முல்லைத்தீவு மாவட்டத்தில் 23, 930 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வயல் நிலங்களில் தொடர்ந்தும் வெள்ள நீர் தேங்கியிருக்கிறதா? என்பதை அவதானித்தே, பாதிப்பு நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்ய முடியும்.

தற்போது மழைவீழ்ச்சி அளவு குறைந்திருப்பதால் வயல்நிலங்களை மூடியிருக்கின்ற வெள்ளம் படிப்படியாக குறைவடைகின்றபோது, தற்போது எதிர்பார்க்கப்படுகின்ற பாதிப்பு நிலைமையை விட, பாதிப்பு நிலைமைகள் குறையக்கூடும் என நம்புகிறோம்"- என்றார்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

விவசாய பாதிப்பு நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கு குறிப்பிட்டளவு நாட்கள் தேவை என திணைக்கள அதிகாரிகள் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால், கூடிய விரைவில் விவசாய பாதிப்பு நிலைமைகளை மதிப்பீடு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகளை உடனடியாக வழங்க உரிய திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# சைவப்புலவர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 02

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2025 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் செ. த. குமரன் அறிவித்துள்ளார்.

இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சையில் சித்தி அல்லது சைவ பரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சையில் சித்தி அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அனுட்டித்து வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் கீழ்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது இளஞ்சைவப்புலவர் தெரிவு அல்லது சித்தாந்த பண்டிதர் தெரிவு அல்லது பண்டிதர் தெரிவு பரீட்சையில் (ஆரிய திராவிடபாசா விருத்திச்சங்கம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் விண்ணப்ப படிவத்தை இணையத்தில் பெற்று பரீட்சை கட்டணமாக 1200 ரூபாயை இலங்கை வங்கியில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கணக்கு இலக்கம் 1133272 இற்கு வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை எதிர்வரும் 30.12.2024 இற்கு முன்பாக சைவப்புலவர் சி. கா. கமலநாதன் தலைவர் அகில இலங்கை சைவப்புலவர் மாசேரி வரணி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

வங்கிப்பற்றுச்சீட்டு விண்ணப்படிவத்துடன் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக அறவீட்டுக் கட்டணம் 300 ரூபாயுடன் 15.01.2025 வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு பிந்திய விண்ணப்பங்கள் ஏதுவும் ஏற்றுக் கொள்ளப் படமாட் டாது.

இப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விடயங்களை 0777197067, 0779773538, 0776132176 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

பரீட்சைகள் 2025 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெறும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (எ)

# இடைத்தங்கல் நிலையங்களுக்கு சென்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 02

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் இடைத்தங்கல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து அவர்களின் குறை நிறைகளை கேட்டறிந்து தீர்வு காண்பதற்காக யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், பல்வேறு நிலையங்களுக்குச் சென்று ஆய்வு செய்தார்.

இதன்போது, கல்லுண்டாய் பகுதியில் ஏற்பட்ட வெள்ள நிலைமைகளை ஆய்வு செய்து கல்லுண்டாய் தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் கட்டடத்தில் தங்கியுள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறை நிறைகளைக் கேட்ட றிந்து கொண்ட துடன், உடன டியாக தீர்க்கக் கூடிய பிரச்னை களுக்கு தீர்வுக ளையும் வழங் கினார்.



இதன் போது அனர்த்தத்துக்கு அப்பால் பொது மக்களால் முன்வைக் கப்பட்ட காணிப் பிரச்னைக்கு, மாகாணக் காணி ஆணையா ளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரை யாடியதன் பின்னர், கல்லுண் டாயில் காணிக் கச்சேரி நடத்து வதற்கான நடவடிக்கைகளை விரைவில் சண்டிலிப்பாய் பிர தேச செயலாளர் ஊடாக மேற் கொள்ள ஆவன செய்வதாக மக்களுக்குத் தெரிவித்தார். (எ)

# தீ விபத்தில் சிக்கிய முதியவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, டிசெ. 02

முல்லைத்தீவு - சிலாவத்துறை பகுதியில் தீ விபத்தில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்தார் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் முல்லைத்தீவு - சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்த 75 வயதுடையவர் ஆவார்.

தனது மகனின் வீட்டுக்கு அருகிலுள்ள மற்றுமொரு வீட்டில் தனியாக வசித்து வந்த முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடும் மழையால் ஏற்பட்ட குளிரை சமாளிக்க வெப்பமூட்டுவதற்காக வீட்டுக்குள் தீ பற்ற வைத்தார்.

இதன்போது தீ பரவியதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர் இழப்பீட்டு தொகை போதுமானதாக இல்லை!

### கமநல அமைப்புகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 02

**சீரற்ற காலநிலையினால் ஆறு வகையான பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்காக அரசாங்கம் அறிவித்துள்ள இழப்பீட்டுத் தொகை தங்களுக்கு போதுமானதல்ல என கமநல அமைப்புகள் தெரிவிக்கின்றன.**

காலநிலை அனர்த்தங்களால் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை அரசாங்கம் உரிய முறையில் மதிப்பீடு செய்ய வேண்டும் எனவும் அந்த அமைப்பினர் கோரியுள்ளனர்.சீரற்ற காலநிலை காரணமாக வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக சுமார் 338,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, நெல், சோளம், உருளைக்கிழங்கு, சோயா, மிளகாய் மற்றும் பெரிய வெங்காயம் போன்ற பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்காக ஏக்கர் ஒன்றுக்கு 40,000 ரூபாவுக்கு மேற்படாத தொகை இழப்பீடாக வழங்கப்படும் என விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன நேற்று முன்தினம் அறிவித்தார்.எவ்வாறாயினும், குறித்த இழப்பீட்டுத் தொகை தமக்கு போதுமானதாக அமையாது என கமநல அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சீரற்ற காலநிலையினால் தங்களது பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். அதற்காக அரசாங்கம் உரிய வகையில் நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (அ)

# நியாயமான விலையில் சந்தையில் அரிசி இல்லை!

கொழும்பு, டிசெ. 02

புதிய அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்பட வில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாட்டில், அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துச் செல்வதாகவும், அரிசி மாஃவியா இயங்கிக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

# சட்டவிரோதமாக தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 02

வெலிமடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலதொட்ட எல்ல பிரதேசத்தில், சட்டவிரோதமாக தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26, 32 மற்றும் 56 வயதானவர்கள் எனவும், வெலிமடை மற்றும் மஹியங்கனை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்களிடம் ,ருந்து அகழ்வு உபகரணங்கள் மற்றும் பூசைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

*அரிசி இறக்குமதிக்கு தயார்!*

# இறக்குமதியாளர்கள் அரசாங்கத்துக்கு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 02

நாடு அரிசி தட்டுப்பாட டுக்குத் தீர்வாக அரிசியை இறக்குமதி செய்வதற்கு தாங்கள் தயாராக உள்ளதாக இறக்குமதியாளர்கள் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அண்மையில் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுடன் இறக்குமதியாளர்கள் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

அதன்போது ஒரு கிலோ அரிசிக்கான இறக்குமதி வரியை 65 ரூபாவிலிருந்து 40 ரூபாவாக குறைக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரிசி இறக்குமதிக்குச் சந்தர்ப்பம் வழங்கினால் 15 நாட்களுக்குள் சந்தையில் நாட்டு அரிசிக்கான தட்டுப்பாட்டைக் குறைக்க முடியும் என இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் விவசாயிகளிடம் கொள்வனவு செய்வதற்குப் போதியளவு நெல் கையிருப்பில் இல்லை எனவும் இறக்குமதியாளர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த நிலையில், அரிசி இறக்குமதிக்கான விலை மனு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்ற குழுக்களை இரத்துச் செய்ய தீர்மானம்!

கொழும்பு, டிசெ. 02

கடந்த அரசாங்கத்தின் போது தன்னிச்சையாக நியமிக்கப்பட்டதாக கூறப்படும் பாராளுமன்றத்தின் பல குழுக்களை இரத்து செய்ய அல்லது மாற்றுவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது.

இந்த குழுக்களை நியமித்ததால் பெருமளவு பணம் விரயமாவதை அரசு கண்டறிந்ததை அடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பாராளுமன்றக் குழுக்களின் முறையான நியமனம் தொடர்பான விஷயங்களை மறுஆய்வு செய்து அதற்கான முன்மொழிவுகளை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு ஏற்கெனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

ஒரே மாதிரியான விடயங்களுக்கு பல துறைசார் கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், இதுபோன்ற விடயங்களை ஒரு குழுவின் கீழ் கொண்டு வருவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக, அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய பல துறைசார் கண்காணிப்புக் குழுக்கள் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றை ஒரே குழுவின் கீழ் கொண்டுவர முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாராளுமன்ற குழுக்களின் பரிந்துரைகளை தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கும் பொறிமுறையொன்றை ஏற்படுத்துவது தொடர்பிலும் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# 15 வயது மாணவி துஷ்பிரயோகம் 52 வயது குடும்பஸ்தர் கைதானார்

கொழும்பு, டிசெ. 02

15 வயது உடைய பாடசாலை மாணவி துஸ்பிரயோகம் 52 வயது உடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் இடம் பெற்று உள்ளது.

இது குறித்து நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஜ.வீரசேகர கூறுகையில்-கடந்த 28 ஆம் திகதி அந்த மாணவியின் முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் நல்லதண்ணி தோட்டத்தில் உள்ளவர். அவருக்கு மேலும் ஒரு வீடு லக்சபான தோட்ட முள்ளு காமம் கீழ் பிரிவில் உள்ளது. அங்கு சென்று வருகையில் பாதிக்கப்பட்ட மாணவியின் தாயாருடன் ஏற்பட்டு உள்ள தொடர்பினால் இந்த நிகழ்வு ஏற்பட்டது.

தாயார் நல்ல தண்ணி நகரில் உள்ள விருந்தினர் விடுதியில் சமையல் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறார். இரண்டு பெண் குழந்தைகள் பாடசாலை செல்பவர்கள்-என்றார். (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 45,448 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 19,487ஆகும்.

இதேவேளை, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 22 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# வயல்வெளியில் உயிரிழந்த நபர்!

கொழும்பு, டிசெ. 02

ஹெட்டிபொல - வெடியே கெதர பிரதேசத்தில் வயல்வெளியில் நபரொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹல்மில்லவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரணம் நிகழ்ந்த விதம் தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை.

சடலம் நீதவான் விசாரணைகளுக்கு பின்னர் பிரேத பரிசோதனைகளுக்காக குளியாப்பிட்டிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# மொறட்டுவை பல்கலை மருத்துவ மாணவரின் பிரச்னைக்குத் தீர்வு!

கொழும்பு, டிசெ. 02

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்களுக்கு அடுத்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பமாகவுள்ள பேராசிரியர் பயிற்சி, களுத்துறை நாகொடை போதனா வைத்திய சாலையில் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்துவரும் மாதங்களில் குறித்த வைத்திய சாலையில் முன்னெடுக்கப்பட [illegible] களை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, சுமார் 400 பேர் மொரட்டுவை மருத்துவ பீடத்தில் பயில்கின்றனர்.

குறித்தபல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் மருத்துவ மாணவர்களுக்கான தேவையான மருத்துவ பயிற்சிகளை வழங்குவதற்காக களுத்துறை நாகொடை வைத்தியசாலை கடந்த 2021 ஆம் ஆண்டு போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

பௌதீக வளங்கள் இல்லாமையினால் பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கமானவர்களுக்கு அநுர அரசில் உயர் பதவி

## அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 02

**ஆயுர்வேத திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் உயர் பதவிகளுக்குத் தகுதியற்ற மற்றும் தங்களுக்கு நெருக்கமானவர்களை தற்போதைய அரசாங்கம் நியமித்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த இலங்கை ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளின் ஒன்றிணைந்த அமைப்பின் தலைவர் வைத்தியர் விமுக்தி டி சொய்சா இதனைத் தெரிவித்தார்.

தகுதியற்ற மற்றும் தங்களுக்கு நெருக்கமானவர்களை உயர் பதவிகளுக்கு நியமிக்கும் செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் ஆயுர்வேத திணைக்களத்திலிருந்து ஆரம்பித்துள்ளதா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

இவ்வாறான நியமனங்கள் ஊடாக அரச ஆயுர்வேத சேவை உள்ளடக்கிய அரச சேவையைக் கேள்விக்குறியாக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் கோருவதாகவும் ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளின் ஒன்றிணைந்த அமைப்பின் தலைவர் வைத்தியர் விமுக்தி டி சொய்ஸா குறிப்பிட்டார். (அ)

# பாதிப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டார் ஜீவன் எம்.பி

கொழும்பு, டிசெ. 02

நுவரெலியா மாவட்டத்தில் மழை வெள்ள அனர்த்தங்களால் பாதிப்பட்ட பிரதேசங்களை பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டார்.

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

அந்த வகையில் நுவரெலியா மாவட்ட மக்களும் அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்திருந்தனர்.

இந்த நிலையில் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களுக்கு நேரில் சென்ற பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் பாதிக்கப்பட்ட மக்ககளுக்கு உலர் உணவு பொருட்களை வழங்கி வைத்தார்.

முதற் கட்டமாக நுவரெலியா மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான டிக்கோயா, பொகவந்தலாவ, அக்கரபத்தனை ஆகிய பகுதி மக்களுக்கான நிவாரண பொதிகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டது.

பாதிப்புக்குள்ளான மக்களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்துக் கொடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். (அ)

# உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 02

நிகவெரட்டிய - மானபாய பிரதேசத்தில் உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர், கைது செய்யப்பட்டுள்ளார்.

நிகவெரட்டிய பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் 36 வயதுடைய விஹாரகம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை நிகவெரட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பல்வேறு பகுதிகளிலும் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற மட்டம் வரை உயர்வு!

கொழும்பு, டிசெ. 02

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரச்சுட்டெண்ணானது சிறிதளவில் ஆரோக்கிய மற்ற மட்டம் வரை உயரக் கூடும் எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு பிரிவு அறிவித்துள்ளது.

தற்போதைய காலநிலை மற்றும் நாட்டுக்கு வடக்கு திசையிலிருந்து வரும் காற்றின் தன்மை என்பவற்றின் காரணமாகக் காற்றின் தரச்சுட்டெண் 92 முதல் 120 வரையான மட்டத்தில் இன்றைய தினம் காணப்படக்கூடும்.

எனவே, சுவாச ரீதியான பாதிப்புகளைக் கொண்டுள்ளவர்கள் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரம், நுவரெலியா, எம்பிலிப்பிட்டிய, களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய நகரங்களில் மாத்திரம் காற்று தரச்சுட்டெண் மத்திம மட்டத்தில் நிலவும் எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு பிரிவு அறிவித்துள்ளது. (அ)

# வாகன நெரிசலை கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 02

வீதி சமிக்ஞை விளக்கு அமைப்புகளைப் புதுப்பிக்கும் வரையில், வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளைப் போக்குவரத்து காவல் துறையினர் கையாளவுள்ளதாக பொலிஸ் அறிவித்துள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரையின் பேரில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த 2 நாட்களாகப் பிரதான நகரங்களில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகளுக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது அதிகளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அதிக வாகன நெரிசல் நிலவும் காலப்பகுதிக்கு ஏற்றவாறு சமிக்ஞை விளக்கு அமைப்பு மாற்றியமைக்கப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, அவற்றைத் திருத்தியமைக்கும் வரையில் குறித்த விளக்குகளின் செயற்பாடுகளை இடைநிறுத்தி, வாகன போக்குவரத்து கட்டுப்பாட்டினை போக்குவரத்து பொலிஸாரைக் கொண்டு முன்னெடுக்குமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ)


# அநுரவுக்கு ரணில் பாராட்டு!

கொழும்பு, டிசெ. 02

தற்போதைய அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துடன் இணைந்து செயற்பட்டு வருவது தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தான் பாராட்டு தெரிவிப்பதாக முன்னாள் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் ஹோட்டல் ஒன்றின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் அமைச்சர் விஜித ஹேரத், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)



# வாள்வெட்டில் ஒருவர் பலி!

கொழும்பு, டிசெ. 02

கதிர்காமம் பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதாக செல்ல கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

செல்ல கதிர்காமம் பகுதியைச் சேர்ந்த 39 வயதான எச்.கே. பிரசன்ன குமார என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலையுடன் செல்ல கதிர்காமம் பிரதேசத்தில் வசிக்கும் 5 பேர் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொலையாளிகள் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மோசடி விசாரணை பிரிவின் பொறுப்பதிகாரிக்கு மறியல்!

கொழும்பு, டிசெ. 02

கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டில் கைதான நீர்கொழும்பு பிராந்தியத்தின் பொலிஸ் மோசடி விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீர்கொழும்பு பதில் நீதவான் கே.ஜி.குணதாச முன்னிலையில் ஆஜர்படுத்தப் படுத்தப்பட்டார்.

அதன்போது, அவர் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

வாடகை கார் தொடர்பான தகராறு ஒன்றைத் தீர்த்து வைப்பதற்காக 270,000 ரூபாய் பெறுமதியான குளிரூட்டியைக் கையூட்டலாகக் கோரி, அதற்கான பணத்தை வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரின் கணக்கில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது, சந்தேகநபரான பொலிஸ் அதிகாரி கைதானார். (அ)

# பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு நிதி சேகரித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 02

பயங்கரவாத செயற்பாடுகளுக்காக நிதி சேகரித்த குற்றச்சாட்டில் பிரித்தானியக் குடியுரிமை பெற்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - வடக்கு குற்றப் பிரிவினரால் கொழும்பு நீதவான் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பயணத்தடை உத்தரவுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய குறித்த நபர், 2009 ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறி பிரித்தானியக் குடியுரிமை பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அங்கிருந்து பயங்கரவாதச் செயற்பாடுகளுக்காகப் பணம் சேகரித்ததாகக் கூறப்படும் அவர், நாடு திரும்பி கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் நிதியை விநியோகித்துள்ளதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு மீண்டு வருவதற்கு சிறந்த வழி சுற்றுலாத்துறை வளர்ச்சி!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 02

**நாடு வீழ்ந்துள்ள பாதாளத்தில் இருந்து மீண்டு வருவதற்கு இருக்கும் சிறந்த வழி சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலாத் துறையானது நமது நாட்டின் அபிவிருத்திக்கு வேகமாக முன்னேறக்கூடிய தொரு பிரதானமானதொரு துறையாகும். இந்தத் துறையில் பல சவால்கள் காணப்படுகின்றன.

நமது நாடு குறிப்பாக மாநாட்டு நடவடிக்கைகள் சார் பல்வேறு வாய்ப்புகளை ஊக்குவிக்கும் மையமாக முன்னேற வேண்டும். இதற்குத் தேவையான பக்க பலத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இதன் நிமித்தம் அதிகளவு ஹோட்டல்கள் தேவைப்படுவதால், அரச தலையீட்டில் இதற்கான அதிகபட்ச தலையீட்டைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்து நாம் முன்னோக்கிச் செல்ல முடியும்.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளில் உயர் மட்ட சிறந்த சேவையை வழங்க, நன்கு பயிற்சி பெற்ற மற்றும் தேறிய திறன்களை தன்னகத்தே கொண்ட ஊழியர்களை நாம் உருவாக்க வேண்டும்.

நாடு எதிர்கொண்டுள்ள முப்பெரும் இடர்களால், நமது நாட்டின் தொழிலாளர் வளம் வெளிநாடுகளுக்கு நகரும் மூளைசாலிகள் வெளியேற்றம் நடந்து வருகிறது. ஹோட்டல் துறையை வலுப்படுத்த, 9 மாகாணங்களிலும் நவீன வசதிகளுடன் கூடிய சர்வதேச தரம் வாய்ந்த ஹோட்டல் பயிற்சி கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும் - என்றார். (அ)

# சந்திரிகாவுக்கு கடிதம் எழுதிய மைத்திரிபால!



கொழும்பு, டிசெ. 02

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

சுதந்திரக் கட்சியை மீண்டும் வெற்றிக் கட்சியாக முன்னெடுக் கும் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மைத்திரி, சந்திரி காவிடம் எழுத்து மூலம் கோரி யுள்ளார்.

கட்சியை மீள கட்டியெழுப்புவதற்காக பூரண ஒத்துழைப்பினை வழங்கத் தயார் எனவும், தம்மால் தொடுக்கப்பட்ட வழக்கினை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவிதமாக கட்சியின் ஏனைய தரப்பினரால் தொடுக்கப்பட்ட வழக்குகளையும் மீளப் பெற்றுக்கொண்டால் கட்சியை மீளக்கட்டியெழுப்ப முடியும் என அவர் தெரிவித் துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடாத தூய்மையான இளைஞர்களிடம் கட்சியை ஒப்படைக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால வலியுறுத்தியுள்ளார்.

கட்சியில் எந்தவொரு பதவி நிலையும் தமக்கு தேவையில்லை எனவும் எதிர்காலத்தில் கட்சியின் உறுப்பினராக இருந்து கட்சிக்கு ஆதரவளிக்கப் போவதாகவும் சிறிசேன அந்த கடிதத்தில் கூறியுள்ளார். (அ)

# பெரிய வெங்காயத்துக்கான விசேட பண்ட வரி குறைப்பு!

கொழும்பு, டிசெ. 02

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை, இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு கிலோகிராம் ஒன்றுக்கான விசேட பண்ட வரியை மாற்றமின்றி தொடர்வதற்கும் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கான வரியைக் குறைப்பதற்கும் நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னதாக, கடந்த ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம், கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதிவரை அமுலாகும் வகையில் உருளைக் கிழங்கு கிலோகிராம் ஒன்றுக்கான விசேட பண்டவரி 50 ரூபாவிலிருந்து 60 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டது.

அத்துடன், ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கான விசேட பண்டவரி 10 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திக்கான நியாயமான விலையொன்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த வர்த்தமானி அறிவித்தலின் செல்லுபடியாகும் காலம் நேற்றுடன், நிறைவடைந்துள்ளமை யினாலும், சந்தையில் தற்போது பெரிய வெங்காயத்தின் விலை கணிசமான அளவு அதிகரித்துள்ளதை கருத்திற்கொண்டும் புதிய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை அமுலாகும் வகையில் பெரிய வெங்காயம் கிலோவொன்றுக்கான விசேட பண்டவரியை 30 ரூபாவிலிருந்து 10 ரூபாய் வரை குறைப்பதற்கு நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

அதேநேரம், ஒரு கிலோகிராம் உருளைக் கிழங்கிற்கான விசேட பண்ட வரியை 60 ரூபாவாக பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 02

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பேலியகொட, சீகிரியா மற்றும் குட்டிகல பொலிஸ் பிரிவுகளில் குறித்த விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பு - கண்டி வீதியில் களனி பாலத்திற்கு அருகில் சைக்கிளில் பயணித்த ஒருவர் பலத்த காயமடைந்து வீதியில் விழுந்துள்ளதாக பேலியகொட பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, விரைந்து செயற்பட்ட பொலிஸ் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் காயமடைந்தவரை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர். எனினும், குறித்த நபர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

களனியில் தற்காலிகமாக வசித்து வந்த அம்பாறை பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, தம்புள்ளை - ஹபரணை வீதியின் இனாமலுவ பிரதேசத்தில் வீதியைக் கடந்த பாதசாரி ஒருவர் மீது லொறியொன்று மோதியுள்ளது.

இதில் பலத்த காயமடைந்த நபர் தம்புள்ளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இனாமலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். பெல்மடுல்ல - நோனாகம வீதியின் ஹாகல பிரதேசத்தில் உழவு இயந்திரத்தின் பின்பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 45 வயதுடைய பெரலனாதர பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மரக்கறி விலை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 02

கடந்த சில நாட்களில் நாட்டின் வானிலை சீற்றத்தினால் நாட்டின் பல பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடும் மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியதால் பயிரிடப்பட்ட நிலங்கள் அழிவடைந்ததால் மரக்கறிகளும் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

இந்நிலையில் நுவரெலியாவில் மத்திய சந்தையிலும் வீதியோர மரக்கறி விற்பனை நிலையங்களிலும் ஒரு கிலோகிராம் போஞ்சியின் மொத்த விற்பனை விலை 650 முதல் 750 ரூபா வரையிலும் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாயின் விற்பனை விலை 1200 முதல் 1300 ரூபா வரையிலும் உயர்ந்துள்ளதுடன் ஏனைய மரக்கறி வகைகளின் விலை அதிகளவில் உயர்ந்த நிலையில் உள்ளதால் மரக்கறிகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுவதால் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மத்திய சந்தைக்கு வரும் அதிகமானவர்கள் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருகின்றனர் அத்துடன் நுகர்வோர் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளதாகவும் இதனால் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் வியாபாரம் இன்றியும் அதிலும் பல மரக்கறிகள் இரண்டு மூன்று நாட்களின் பின் பழுதடைந்து கழிவுகள் ஏற்படுவதாகவும் இதனால் பாரிய நட்டம் ஏற்படுவதாகவும் மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக பழுதடையும் பெருமளவிலான மரக்கறிகளை தினமும் குப்பையில் போட வேண்டியுள்ளதாக அவர்கள் அங்கலாய்ந்துக்கொள்கின்றனர்.

நாடளாவிய ரீதியில் இவ்வாறு மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து வருவதுடன் சீரற்ற காலநிலை காரணமாக தற்போது மரக்கறிகள் நுகர்வோரின் தேவைக்கு ஏற்ற வகையில் விளைச்சல் இல்லாததால் காய்கறி விலை மேலும் உயர்வடையும் சாத்தியம் உள்ளதாக நுவரெலியா மாவட்டத்தில் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களுக்கு பதிலாக எரிபொருள் ஒதுக்கீடு

கொழும்பு, டிசெ. 02

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோக பூர்வ வாகனங்களை வழங்குவதற்கு, முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் மாற்றியமைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்களுக்கு உத்தியோக பூர்வ வாகனங்களை வழங்குவதற்குப் பதிலாக, எரிபொருள் ஒதுக்கீடு வழங்கப்படும் என அதிகாரி ஒருவரை கோடிட்டு கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளுடன் முரண்படும் வாகனங்களின் பிரச்னையை பரிசீலித்த பின்னரே, இந்த முடிவு மாற்றப்பட்டுள்ளது.

அனைத்து அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனங்களை வழங்குவதற்கான முன்மொழிவு கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது.

அவர்களில் சிலர் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்கினால் தாங்களும் இதேபோன்ற வாகனங்களை கோரப்போவதாக தெரிவித்திருந்தனர்.

முன்னதாக, அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாகனங்களை ஏற்றுக் கொள்வதாக ஆளும் கட்சி உறுப்பினர்களில் ஒரு பிரிவினர் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

குறிப்பாக மாகாணங்களில் உள்ள தமது தேர்தல் தொகுதிகளுக்கான பயணங்களுக்கு வாகனங்கள் தேவை என்பதை சுட்டிக்காட்டியிருந்தனர்.

எவ்வாறாயினும், அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரியில்லா வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையை அரசாங்கம் தொடராது என பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை இந்த வசதியைப் பெறுவதற்கான, இந்த அமைச்சரவைப் பத்திரத்தை தமது அமைச்சு சமர்ப்பிக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், அமைச்சர்களின் பயன்பாட்டிற்காக புதிய வாகனங்களை இறக்குமதி செய்யப்போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அனர்த்த முகாமைத்துவ குழுவின் செயல்பாடுகள் குறித்து ஆராய்வு

அட்டாளைச்சேனை, டிசெ. 02

அட்டாளைச்சேனை அனர்த்த முகாமைத்துவ குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட மீளாய்வும் எதிர்கால செயல்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட ஒன்றுகூடல் நிகழ்வும் அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவரும், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ. எல். ஹனீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெவ்வை பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர், அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், ஜம்இய்யதுல் உலமா சபையின் அட்டாளைச்சேனை கிளை பிரதிநிதிகள், துறைசார் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக நல அமைப்பினர் போன்றோரை இணைத்துக் கொண்டு அனர்த்தத்தை எதிர்கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்ட இவ் விசேட அனர்த்த முகாமைத்து குழு, வெள்ள அனர்த்தத்தின் போது பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் சென்றது.

இதன்போது அனர்த்த கால வேளையில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டதுடன், அனர்த்த காலப் பகுதியில் பொதுநல செயல்பாடுகளுக்காக உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் அனர்த்தம் இடம்பெறுகின்ற போது குறைபாடுகளற்ற சேவைகளை மக்களுக்கு வழங் கும் நடைமுறைகள் தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன. (எ)

# ஆறு மாணவர்கள் உயிரிழந்த விபத்து குறித்து விசாரணை!

### பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் நேற்று ஆய்வு

காரைதீவு, டிசெ. 02

**காரைதீவு- மாவடிப்பள்ளியில் உழவியந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு 6 மாணவர்கள் உயி ரிழந்த அனர்த்தம் இடம்பெற்ற பகுதிக்கு நேற்றுக் காலை சென்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டனர்.**



அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே. எச். எம். என். ஜயபத்மவின் ஆலோசனைக்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திகவின் வழிகாட்டலில் இந்த ஆய்வு - விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி. எஸ் ஜெயலத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் காரைதீவு பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் ஒத்துழைப்புகளை வழங்கி னர்.

அப்பகுதியில் வெள்ள நிலை ஏற்பட்ட போது சுமார் 5 அடிக்கும் அதிகமான உயரத்தில் வெள்ளம் சென்றதாகவும் மாணவர்களை ஏற்றி வந்த உழவியந்திரம் சுமார் 150 மீற்றர் இயந்திரத்துடன் இணைப்பை துண்டிக்கக் கூடிய வகையில் பெட்டி வேறாக பயணித்திருக்க கூடும் என்ற கோணத்தில் பல்வேறு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தவிர விபத்து நடைபெற்ற போது அங்கு என்ன நடந்தது யார்? யார்? பயணித்தார்கள் போன்ற கேள்விகள் தொடுக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த மாதம் 26 ஆம் திகதி நிந்தவூரில் இருந்து சம்மாந்துறை நோக்கிச் சென்ற 12 பேரை ஏற்றிச் சென்ற உழவியந்திரம் விபத்துக்குள்ளாது. இதன்போது நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியிலிருந்து சம்மாந்துறைக்கு விடுமுறையில் சென்ற 6 மாணவர்கள் உயிரிழந்தனர்.

அத்துடன் இந்த விபத்தில் உழவியந்திர சாரதி மற்றும் இளைஞன் ஒருவரும் உயிரிழந்தனர். (எ)

## குடிநீர் பிரச்னைக்கு தீர்வு வேண்டும்

### அனர்த்த முகாமைத்துவ கூட்டத்தில் கோரிக்கை

காரைதீவு, டிசெ. 02

கடும் வெள்ளத்தால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீர் வழங்கல் குழாயில் ஏற்பட்ட பாதிப்பால் காரைதீவு, நிந்தவூர் மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகம் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவ கூட்டத்தில் இடைத்தங்கல் முகாம்களுக்கு குடிநீர் வழங்குவதை முன்னிலைப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது, அல்- மீஸான் பௌண்டேஷன் சிறீ லங்கா தவிசாளர் யூ. எல். என். ஹுதா உமர் மற்றும் ஜாஹீர் பௌண்டேஷன் தவிசாளர் ஏ. எம். ஜாஹீர் ஆகியோர் மாளிகைக்காடு பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை எடுத்துக் கூறி, இரவோடிரவாக குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைத்தனர். இதனை ஏற்று குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் காரைதீவு பிரதேச சபையின் உதவியு டன் மக்களுக்கு புது காப்பான தூய குடிநீர் வழங்கும் பொருட்டு மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபை குடிநீர் வழங்கல் நடவடிக்கையை மேற்கொண்டு வந்ததுடன் பொது மக்களுக்கு வீடு வீடாகச் சென்று குடிநீர் விநியோகித்தனர்.

மேலும் குடிநீர் விநியோக சேவையை விஸ்தரிக்க தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, காரைதீவு பிரதேச செயலகம் என்பன இணைந்து காரைதீவு மற்றும் மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு பௌஸர்கள் மூலமாக குடிநீர் வழங்கும் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இதனடிப்படையில், பிரதேச செயலகத்தின் உதவியுடன் காரைதீவு பிரதேச செயலத்துக் குட்பட்ட 10 இடங்களில் மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபை, ஜாஹீர் பௌண்டேஷன், சமூக அபிவிருத்தி அமையம் ஆகியவற்றின் உதவியுடன் குடிநீர் தாங்கிகளை வைத்து, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பௌஸர் மூலம் குடிநீர் விநியோக நடவடிக்கையை தொடர்ச்சியாக செயல்படுத்தி, கண்காணித்து வருகின்றது.

தற்போது நிலவும் வெள்ள அனர்த்த சூழலில், இக்குடிநீர் வழங்கல் மூலம் சுமார் 1500 குடும்பங்கள் நன்மையடைந்து வருவதுடன், இச்செயல்பாடுகள் யாவும் காரைதீவு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றன.

## மார்க்கண்டு அறக்கட்டளையால் மக்களுக்கு உலருணவு வழங்கல்



காரைதீவு, டிசெ. 02

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரைதீவு மக்களுக்கு மார்க்கண்டு அறக்கட்டளை அமைப்பால் நேற்று ஞாயிற்றுக்கிழமை உலருணவு பொருட்கள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வந்த கனமழையால் பாதிக்கப்பட்ட காரைதீவு கிராமத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட 62 குடும்பங்க ளுக்கு இவ்வாறு உலர் உணவுப் பொதிகள் காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த மணிமண்டபத்தில் வைத்து வழங்கப்பட் டன.

இராமகிருஷ்ண மிஷன் சுவாமி நடராஜானந்தா ஜீ யின் 121 ஆவது ஜனன தினத்தை யொட்டி உலருணவு பொருட்கள் வழங்கப்பட்டன.

காரைதீவு இந்து சமய விருத்திச் சங்க தலைவர் செ. மணிமாறன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, கண்ணகி அம்மன் ஆலய தர்மகர்த்தா இ. குணசிங்கம், சித்தானைக்குட்டி ஆலய தர்மகத்தா சி. நந்தேஸ்வரன் ஆகியோர் இணைந்து உலருணவு பொதிகளை வழங்கினர். (எ)

## வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் அம்பாறை கடற்றொழிலாளர்கள்

கல்முனை, டிசெ. 02

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வந்த அடைமழை தற்போது குறைவடைந்து கால நிலை சாதாரண நிலையை அடைந்து வருகின்ற போதிலும் பல்வேறு தாழ்நிலப் பிரதேசங்களில் நீர் நிரம்பிக் காணப்படுகின்றன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் விவசாயச் செய்கை மற்றும் மீன்பிடித் தொழில் போன்றவற்றுக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக நெற்செய்கை பெருமளவில் பாதிப்படைந்துள்ளன. நீர் நிலைகளின் கொள்ளளவினைத் தாண்டி நீர் பெருக்கெடுத்தமையாலும், தொடர்ந்து பெய்த அடைமழை காரணமாகவும் இம்மாவட்டத்தில் உள்ள பல்லாயிரக் கணக்கான வயல்கள் பாதிக்கப்பட்டதுடன், மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த பெருந்தொகையான மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால் தமது கடற்றொழில் உபகரணங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர். (எ)

## தாராள உள்ளங்கள் அமைப்பால் உலருணவு பொருட்கள் வழங்கல்

கல்முனை, டிசெ. 02

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மேட்டுவட்டை கிராம மக்களுக்கு "தாராள உள்ளங்கள் அறக்கட்டளை" எனும் அமைப்பு உலருணவு பொருட்களை வழங்கி வருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பாண்டிருப்பு மேட்டுவட்டைக் கிராமத்தில் உள்ள 116 குடும்பங்களுக்கு இவ் உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் வழங்கப் பட்டன.தாராள உள்ளங்கள் அறக்கட்டளையின் தலைவர் ஜே. ஜெயப்பிரகாஷ் தலைமை யில் பாண்டிருப்பு மறுமலர்ச்சி சனசமூக நிலையத்தில் வைத்து உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ், தாராள உள்ளங்கள் அறக்கட்டளையின் செயலாளர் எஸ். சிறிஹரன், பொருளாளர் கே. நவநீதன் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் தரப்பு மீறிவிட்டது

பெய்ரூட், டிசெ. 02

**போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி லெபனானில் வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் படைத் தரப்பு நடத்தியுள்ளதாக ஹிஸ்புல்லா போராளிகள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.**

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் ஓராண்டுக்கும் மேலாக போர் இடம்பெற்று வருகிறது. இந்தப் போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா செயல்படுகிறது. லெபனானில் இயங்கி வரும் இந்த ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு ஈரான் ஆதரவாகவுள்ளது. இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில் லெபனானில் 3,800 இற்கும் அதிகமானோர் கொன்று குவிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். 12 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்தனர். இந்தச் சூழலில் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் எடுத்த முயற்சியின் பலனாக இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் கடந்த 27ஆம் திகதி அமுலுக்கு வந்தது.

இந்த நிலையில், லெபனான் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது. ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்த தயாராக இருந்ததாகவும் இதனால், தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் கூறியது. ஆனால், அதைத் திட்டவட்டமாக மறுத்துள்ள ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் வேண்டுமென்றே போர் நிறுத்தத்தை மீறி தாக்குதல் நடத்தியதாக குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ)

# "குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது மிக அவசியம்"

சிட்னி, டிசெ. 02



குழந்தைகளின் (சிறுவர்களின்) பாதுகாப்பை உறுதி செய்யும் சமூகப் பொறுப்பு சமூக வலைத்தள நிறுவனங்களுக்கு உள்ளது என்று அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தத் தடை விதிக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில், ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பிரதமர் மேலும் கூறுகையில்,

"நம் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்ற சமூகப் பொறுப்பு தற்போது சமூக வலைத்தள நிறுவனங்களுக்கும் உள்ளது. அதற்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இதில் நாங்கள் உறுதியாகவுள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தச் சட்டம் மிகத் தெளிவாகவுள்ளது. அதில் சந்தேகம் வேண்டாம்.

18 வயது எட்டாதவர்களுக்கு மதுபானம் கொடுக்கக்கூடாது என்று சட்டம் சொல்கிறதோ அதே போன்று தான் இதுவும். மேலும், இளம் அவுஸ்திரேலியர்களுக்கு இது நல்ல பலன் தரும், தீங்கினை குறைக்கும்"- என்றார். (எ)

# நைஜீரியாவில் படகு விபத்து 27 பேர் பலி, 100 பேர் மாயம்



லாகோஸ், டிசெ. 02

நைஜீரியாவில் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் பலியாகினர். 100 இற்கும் அதிகமானோர் மாயமாகினர். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

வடக்கு நைஜீரியாவின் நைஜர் ஆற்றில் இந்தப் படகு விபத்து நிகழ்ந்தது. விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. ஆனால், விபத்து இடம்பெற்ற போது படகில் 200இற்கும் அதிகமானோர் இருந்ததாகவும் அவர்கள் அனைவரும் கோகி பகுதியில் இருந்து நைகர் நகரிலுள்ள சந்தைக்குச் செல்லும் போது இந்த விபத்து இடம்பெற்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர் 27 சடலங் களை மீட்டனர். 100இற்கும் மேற்பட்டோரை காணவில்லை. அவர் களில் பெரும்பாலானோர் பெண்கள்.

நைஜீரியாவில் உரிய வீதி வசதிகள் இல்லாத பகுதிகள் பல உள் ளன. அந்தப் பகுதிகளில் எல்லாம் இன்றளவும் படகு பயணம் தான் ஒரே போக்குவரத்து வழியாக உள்ளது. இந்த நிலையில் அந்தப் பட குகளில் அதிக ளவில் மக்களை ஏற்றுவதும் தொடர்கதையாக உள்ளது. இதனால் அவ்வப்போது விபத்துகளும் இடம்பெறுகின்றன. கடந்த ஒக்ரோபர் 3ஆம் திகதி இடம்பெற்ற இது போன்ற படகு விபத்தில் 60 பேர் பலியாகினர். (எ)

# உடனடி போர் நிறுத்தம் தேவை பலஸ்தீனத்துக்கு மோடி கடிதம்

புதுடில்லி, டிசெ. 02

"பலஸ்தீனத்தில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். அனைத்துவித தீவிரவாத நடவடிக்கைகளும் முடிவுக்கு வரவேண்டும். பலஸ்தீன மக்களுக்கு தொடர்ந்து மனிதாபிமான உதவிகள் கிடைக்க வேண்டும்"- இவ்வாறு பலஸ்தீனத்துக்கு இந்தியப் பிரதமர் மோடி கடிதம் அனுப்பியுள்ளார்.

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு, அந்த நாட்டு அரசுக்கு மோடி எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு



கூறப்பட்டுள்ளது.

பலஸ்தீன மக்களின் மேம்பாட்டுக்கு இந்தியா தொடர்ந்து தனது ஆதரவை தெரிவிக்கும். பலஸ்தீனத்தில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். பணயக் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அனைத்துவிதமான தீவிரவாத நடவடிக்கைகளும் முடிவுக்கு வரவேண்டும். காஸாவில் இடம்பெறும் மோதல், உயிரிழப்பு - சோகத்தை பலஸ்தீன மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அங்கு தற்போது நிலவும் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நிலை குறித்து இந்தியா மிகுந்த கவலை கொள்கிறது. பலஸ்தீனத்தில் நீடித்த மற்றும் அமைதியான தீர்வு ஏற்பட்ட துதரக அளவிலான பேச்சுகள்தான் தீர்வு என்பதை இந்தியா உறுதியாக நம்புகிறது என்று மோடி குறிப்பிட்டுள்ளார். (எ)

# மேலும் 3 கோவில்கள் மீது பங்களாதேஷில் தாக்குதல்

## இஸ்கான் அமைப்பினர் உட்பட17 பேரின் வங்கி கணக்கு முடக்கம்

டாக்கா, டிசெ. 02

பங்களாதேஷில் மேலும் 3 கோவில்கள் மீது வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதேவேளை, இஸ்கான் அமைப்பினர் உட்பட 17 பேரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. அந்த அமைப்பின் தலைவர் சின்மோய் கிருஷ்ண தாஸ் தேச துரோக வழக்கில் கைது செய்யப்பட் டுள்ள நிலையில், அவரைப் பார்க்கச்சென்ற இன்னொரு பூசாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது இந்துக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# ரஷ்யாவுக்கு வடகொரியா எப்போதும் ஆதரவளிக்கும்

## கிம் ஜாங் உன் உறுதி

பியாங்க்யாங், டிசெ. 002

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு, வடகொரியா எப்போதும் ஆதரவு வழங்கும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்தார்.

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் செயல்படுகின்றன. அவை ஆயுத உதவி, பொருளாதார உதவிகளை உக்ரைனுக்கு வழங்குகின்றன. அதேபோன்று ரஷ்யாவுக்கு அதன் நட்பு நாடான வடகொரியா ஆதரவாகவுள்ளது. இதன்படி, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரை ரஷ்யாவுக்கு வடகொரியா அனுப்பியது.

உக்ரைன் - ரஷ்யா இடையே கடுமையான போர் நிலவுவதால், மூன்றாம் உலகப்போர் ஏற்படும் அபாயம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பல நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன. இந்த நிலையில் ரஷ்ய இராணுவ அமைச்சர் ஆண்ட்ரே பெலோசோவ் தலைமையிலான குழுவினர் வடகொரியா சென்று



ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை சந்தித்து பேசினர்.

அப்போது கிம் ஜாங் உன் கூறியதாவது, "நேட்டோ கூட்டமைப்பின் பொறுப்பற்ற செயலுக்கு பதிலடி நடவடிக்கையே இந்தப் போராகும் எனவே, உக்ரைனுக்கு எதிரான போரில் வடகொரியா எப்போதும் ரஷ்யாவுக்கு தனது ஆதரவை வழங்கும்" என்றார். (எ)

# பயணிகளுடன் சென்ற படகு கடலில் கவிழ்ந்தது

## 20 பேர் நீரில் மூழ்கிப் பலி

யாவுண்டே, டிசெ. 02

மத்திய ஆபிரிக்க நாடான கேமரூனின் லோகோநெட் - சாரி பகுதியிலுள்ள டாராக் தீவிலிருந்து பயணிகளை ஏற்றிச் சென்ற படகு கடலில் கவிழ்ந்தது, இந்த விபத்தில் 20 பேர் நீரில் மூழ்கிப" பலியாகினர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த மீட்புப் படையினர் நீரில் மூழ்கியவர்களை தேடி வருவதால், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்துக்கான காரணத்தை கண்டறிய முறையான விசாரணை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக சுமை, தவறான செயல்பாடுகள் மற்றும் கடுமையான வானிலை ஆகியவற்றால் அடிக்கடி படகு விபத்துகள் இப்பகுதியில் ஏற்படுகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி

கிறிஸ்ட்சர்ச், டிசெ. 02

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நியூசிலாந்து சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையி லான முதலாவது போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற் றது.

இதில் முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து 348 ஓட்டங் கள் எடுத்தது. அதிகபட்சமாக வில்லியம்சன் 93 ஓட்டங் கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் பிரைடன் கார்ஸ் மற்றும் சோயப் பஷிர் தலா 4 விக்கெட்கள் வீழ்த்தினர். இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கி லாந்து அணி 103 ஓவர்களில் 499 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஹாரி புரூக் 171 ஓட்டங்கள் சேர்த்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 4 விக்கெட்களும், நாதன் சுமித் 3 விக்கெட களும், ரிம் சௌதி 2 விக்கெட்களும் கைப்பற்றினர்.

பின்னர் 151 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸில் விளையாடிய நியூசிலாந்து அணி 254 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. டேரில் மிட்செல் மட்டும் பொறுப்புடன் விளையாட மறுமுனையில் விக்கெட்கள் சரிந்தன. நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக டேரில் மிட்செல் 84 ஓட்டங்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் பிரைடன் கார்ஸ் 6 விக்கெட்களை வீழ்த்தினார்.




இதனையடுத்து 104 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணியின் தொடக்க துடுப்பாட்ட வீரர்களான ஜாக் கிராலி ஓர் ஓட்டத்திலும் பென் டக்கெட் 27 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இதன்பின்னர் ஜோடி சேர்ந்த ஜோ ரூட் - ஜேக்கப் பெத்தேல் இணை மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்து கொண்டதுடன் அதிரடியாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தது. வெறும் 12. 4 ஓவர்களிலேயே 104 ஓட்டங்கள் எடுத்த இங்கிலாந்து அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஜேக்கப் பெத்தேல் அதிரடியாக விளையாடி 37 பந்துகளில் 50 ஓட்டங்களுடனும், ஜோ ரூட் 15 பந்துகளில் 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. (எ)

## 233 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி



டர்பன், டிசெ. 02

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 233 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவுக்கு சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி டர்பனில் நடைபெற்றது. தென்னாபிரிக்கா 191 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்ஸை பறிகொடுத்தது. பதிலுக்கு விளையாடிய இலங்கை அணி 13. 5 ஓவர்களில் 42 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்களையும் இழந்தது. தென்னாபிரிக்க அணி சார்பில் மார்க்கோ ஜான்சன் 7 விக்கெட்களை வீழ்த்தினார் .

தொடர்ந்து 149 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய தென்னாபிரிக்கா 5 விக்கெட்கள் இழப்புக்கு 366 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. அந்த அணியில் டிரிஸ்டன் ஸ்டப்ஸ், தெம்பா பவுமா ஆகியோர் சதமடித்து அசத்தினர் . இதனால் இலங்கை அணிக்கு 516 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இலங்கை அணியால் 282 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

தினேஷ் சண்டிமால் 83 ஓட்டங்களும், தனஞ்செய டி செல்வா 59 ஓட்டங்களும் எடுத்தனர். இதனால் தென்னாபிரிக்கா 233 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (எ)

## சாருஜன் சதமடித்து அசத்தல்




சார்ஜா, டிசெ. 02

சார்ஜாவில் நேற்று நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வீரர் சாருஜன் சதமடித்துள்ளார்

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியிலேயே சாருஜன் 131 பந்துகளில் 102 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்

நேபாள அணிக்கு எதிரான போட்டியில் சாருஜன் அரைச்சதம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# 3ஆவது போட்டியிலும் இங்கிலாந்து வெற்றி

செஞ்சூரியன், டிசெ. 02

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி - 20 போட்டித் தொடரை 3 - 0 என்ற கணக்கில் இங்கிலாந்து மகளிர் அணி கைப்பற்றியது.

இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20, 3 ஒருநாள் மற்றும் ஒரு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் இரு போட்டிகளில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 2 - 0 என முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 124 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. தென்னாபிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக ஷங்காசே 31 ஓட்ட ங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் சார்லோட் டீன் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து 125 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி விளையாடிய இங்கிலாந்து 11.3 ஓவரில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 128 ஓட்டங்கள்



எடுத்து அபார வெற்றி பெற்றது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக டேனியல் வியாட் - ஹாட்ஜ் 53 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 3 - 0 என இங்கிலாந்து கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ஒருநாள் தொடர் வரும் 4ஆம் திகதி தொடங்குகிறது. (எ)

## இறுதிப்போட்டிக்கு சிந்து முன்னேற்றம்



லக்னோ, டிசெ. 02

சையத் மோடி நினைவு சர்வதேச பட்மிண்டன் போட்டி இந்தியாவின் உத்தரபிரதேச தலைநகர் லக்னோவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் பி. வி. சிந்து, சக நாட்டவரான 17 வயது உன்னதி ஹூடாவை எதிர்கொண்டார்.இந்தப் போட்டியில் அனுபவம் வாய்ந்த பி. வி. சிந்து 21 - 12, 21 - 9 என்ற செட் கணக்கில் உன்னதி ஹூடாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இறுதிப்போட்டியில் பி. வி. சிந்து 119ஆம் நிலை வீராங்கனையான சீனாவின் வூ லூவ் யுவை எதிர்கொள்கிறார்.(எ)

# டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் தென்னாபிரிக்க அணி 2ஆம் இடம்

கிறிஸ்ட்சர்ச், டிசெ. 02

இலங்கையுடனான போட்டியில் அபார வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடம்பிடித்துள்ளது.

இதில் முதல் டெஸ்ட் போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

இதையடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) வெளியிட்டுள்ளது. இதில் நியூசிலாந்துக்கு எதிராக வெற்றி பெற்ற இங்கிலாந்து கூடுதலாக புள்ளிகள் பெற்ற நிலையில் அதே இடத்தில் (6ஆவது இடம்) நீடிக்கிறது.

தோல்வியடைந்த நியூசிலாந்து சில புள்ளிகளை இருந்த நிலையில் 4ஆவது இடத்தை இலங்கையுடன் பகிர்ந்துள்ளது. மேலும் இந்த தோல்வியின் மூலம் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதில் நியூசிலாந்துக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியல் வருமாறு,

1. இந்தியா - 61.11 சதவீதம்,2. தென்னாபிரிக்கா - 59. 26 சதவீதம்,3. அவுஸ்திரேலியா - 57. 69 சதவீதம்,4. நியூசிலாந்து - இலங்கை - 50.00 சதவீதம்,6. இங்கிலாந்து - 43. 75 சதவீதம்,7. பாகிஸ்தான் - 33. 33 சதவீதம்,8. மேற்கு இந்திய தீவுகள் - 26.67 சதவீதம்,9. பங்களாதேஷ் - 25.00 சதவீதம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர்...

எழுத்தூர் பாடசாலை, செல்வநகர் ஆலய மண்டபம் போன்ற இடங்களில் தங்கியிருந்த மக்களை சந்தித்த அமைச்சர் அவர்களின் பிரச்னைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இச்சந்திப்பில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் சிறிஸ்கந்த குமார், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## கடற்றொழில்...

சந்திரசேகரும், அத்துமீறும் இந்திய மீனவர்கள் சம்பந்தமாக நெகிழ்ச்சித்தன்மையைக் காண்பிக்க முடியாது என்று அறிவித்துள்ளார்.

அத்துடன், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசும் அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கைது செய்யுமாறும், தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துகின்றபோது அவற்றைக் கைப்பற்றுமாறும் கடற்படைக்குக் கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இவ்வாறான பின்னணியிலேயே இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரைச் சந்திக்கின்றார்.

கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் பதவியை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அவரைச் சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மாகாணசபை...

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை ஆரம்பகாலத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியலமைப்பின் ஊடாக நாட்டில் நடைமறைப்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையிலான சூழலே காணப்படுகிறது.

எனவே பயனற்ற மாகாண சபை முறைமைக்கு பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறக் கூடியதும் அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமையை பெற்றக்கொள்ளும் வகையிலுமான புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்படுகின்றது.

இதற்காக இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்கள் கேட்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து குறுகிய காலங்களே ஆகின்ற நிலையில், நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதில் முன்னுரிமை அளித்து செயல்பட்டாலும், நிரந்தர தீர்வுகளுக்கான பல நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றோம்.

நடைமுறையில் உள்ள பழைமை வாய்ந்த அரசியலமைப்பிற்கு பதிலாக புதிய அரசியலமைப்பு உருவாக்குவது முக்கிய பொறுப்பாக நாங்கள் கருதுகின்றோம்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும். அப்போது 13ஆவது அரசியலமைப்பு திருத்தமோ அல்லது மாகாண சபை முறைமைக்கான தேவையோ நாட்டில் இருக்காது-என்றார். (அ)

## இலங்கை...

விவகாரங்களில் இலங்கையுடன் சிறந்த ஒருங்கிணைப்பை சீனா எப்போதும் பேணி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஷீ ஜின் பிங்கின் விசேட வாழ்த்துச் செய்தியை இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளித்திருந்தார். அந்த வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

பிறந்த தினத்தை முன்னிட்டு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். சீனாவும் இலங்கையும் அண்மைய ஆண்டுகளில் நெருக்கமான உயர்மட்ட பரிமாற்றங்களைப் பராமரித்து, பல்வேறு துறைகளில் ஆழமான ஒத்துழைப்புகளை முன்னெடுத்து வருகிறது. ஒரு பாதை ஒரு மண்டலம் முன்முயற்சியின் ஊடாக இலங்கை பல்வேறு வகையிலும் பயனடைகிறது.

இத்தகைய இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகளின் ஊடாக சர்வதேச மற்றும் பிராந்திய விவகாரங்களில் இலங்கையுடன் சிறந்த ஒருங்கிணைப்பை சீனா எப்போதும் பேணி வருகிறது.

மறுபுறம் இலங்கையின் அபிவிருத்தியிலும், சீன - இலங்கை உறவுகளின் வளர்ச்சியிலும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். இருதரப்பு உறுவுகளை வலுப்படுத்துவதில் முக்கியத்துவம் அளித்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையிலுள்ள...

இந்தநிலையில், இலங்கையில் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விரும்புவதாக டேவிட் லாம்மி குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகாரக் குழு விசாரணையின்போது, இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

“2023ஆம் ஆண்டில், நீங்கள் தமிழர்களுடன் தோளோடு தோள்நின்று, அட்டூழியங்களில் ஈடுபடுபவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரையை பரிசீலிக்குமாறு அப்போதைய பிரித்தானிய அரசாங்கத்தை வலியுறுத்தினீர்கள்.

சர்வதேச நீதிப் பொறிமுறைக்கான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை பரிசீலிக்குமாறு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் அப்போதைய அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

இந்தநிலையில், நீங்கள் இப்போது வெளியுறவுச் செயலாளராகவும், அவர் இப்போது பிரதமராகவும் இருப்பதைக் கூறுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எனவே உங்கள் கருத்துக்களுக்கு ஆதரவாக நின்று, இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புமாறு நான் இன்று உங்களிடம் கேட்கலாமா?” என்று உமா குமரன் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த லாம்மி, இலங்கையில் புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சிக்கு வந்துள்ளதுடன், கடந்த காலங்களில் நடந்த அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறைகள் நேர்மறையானவை.

பிரதமரும், நானும் அந்த புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது முக்கியமானது. உங்களுக்குத் தெரியும், நான் பல ஆண்டுகளாக தமிழ் சமூகங்களுடன், குறிப்பாக இந்த நாட்டில் அதிக நேரத்தை செலவிட்டேன்.

எனவே உணர்வின் வலிமையில், இந்த பிரச்னைகளை எழுப்பியுள்ளீர்கள் என்பதையும் நான் உணர்கிறேன் என்று டேவிட் லாம்மி உமா குமரனுக்கு பதிலளித்துள்ளார். (அ)

## சேமமடு...

குழுவொன்று வாளால் வெட்டியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார்.

எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்ததாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் நாவற்குளம் பகுதியை சேர்ந்த செல்வ நிரோஜன் என்ற 46 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## பெப்ரவரி...

வேட்புமனு இரத்து செய்யப்பட்டு புதிய வேட்புமனு கோரப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற தேர்தலை உடனடியாக நடத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவத்றகு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களினால் எந்தவொரு நன்மையும் இல்லை.

ஏனெனில் குறித்த வேட்பு மனுக்கள் 2022 ஆம் ஆம் ஆண்டில் கோராப்பட்டவை. தற்போது 2 வருடங்கள் முற்றாக கடந்துள்ளது. எனவே பழைய வேட்பு மனுக்களின் ஊடாக உள்ளூராட்சிமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் போது இளம் பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பு இழக்கப்படுகின்றது. 2023 தேர்தல் சட்டவிதிமுறைகளின் பிரகாரம் வேட்பு மனுக்களில் 35 வயதுக்கு குறைந்த இளம் பிரதிநிதித்துவம் நூற்றுக்கு 25 வீதமாக காணப்பட வேண்டும் என்ற யோசனை திட்டம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

எல்பிட்டிய உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் இந்த முறைமை பின்பற்றப்பட்டது. எனவே பழைய வேட்புமனு இரத்து செய்யப்பட்டு புதிய வேட்பு மனு கோரப்பட்டு எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும்- என்றார். (அ)

## தலைவர்...

புலிகளின் தலைவரின் பூர்வீக வீடு அமைந்திருந்த காணியில் கேக் வெட்டி , மரநடுகை மேற்கொள்ளப்பட்டு, பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

அதன் போது நிகழ்விடத்தில், புலிகளின் தலைவரின் புகைப்படத்துடனான பதாகை ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வேளை அங்கு வருகை தந்திருந்த வல்வெட்டித்துறை பொலிஸார் , புலிகளின் தலைவரின் படத்தை அகற்றி விட்டு நிகழ்வை நடத்த அறிவுறுத்தினர்.

அதனை அடுத்து, ஏற்பாட்டாளர்கள் புலிகளின் தலைவரின் படத்தை மறைத்து விட்டு நிகழ்வை முன்னெடுத்து இருந்தனர். இந்நிலையில் பிறந்தநாள் நிகழ்வு தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நிகழ்வின் ஏற்பாட்டாளர் சிவாஜிலிங்கத்தை வாக்கு மூலம் வழங்க பொலிஸ் நிலையம் அழைத்தபோது, சுகவீனம் காரணமாக வருகை தர முடியாது என பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, பொலிஸார் சிவாஜிலிங்கம் வீட்டுக்கு சென்று வாக்குமூலங்களை பெற்றுள்ளனர்.

அதேவேளை, பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்ட ஆறு பேரிடம் பொலிஸார் இதுவரை வாக்கு மூலங்களை பெற்றுள்ளதாகவும், பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## காஸ்...

முற்றுகையிட்டனர்.

இந்நிலையில் நாட்டில் நிலவும் லாப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## வடக்கு...

அடிப்படையில் வழங்குவதன் ஊடாக அவர்களுக்கு நிரந்தர சந்தை வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என வணிகர் கழப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

யாழ். மாநகர சபையுடன் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை முன்னெடுக்க பலர் ஆர்வமாக உள்ளபோதும் அவர்களுக்கான தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான இடங்களையும், அனுமதிகளையும் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்வதாக வணிகர் கழக பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

அதற்குப் பொருத்தமான இடங்களை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஒதுக்கினால் அவற்றை குத்தகை அடிப்படையில் அவர்களுக்கு வழங்க முடியும் எனவும் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரே கூரையில் அலுவலர்களை ஒழுங்குபடுத்தினால் இலகுவாக இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தின் குறிப்பிட்ட சில பிரதேச செயலர் பிரிவுகளில் இடங்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருக்கும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் அதற்கான தடைகள் இருக்காது என நம்புவதாகவும் அவற்றைச் செய்ய முடியும் எனவும் சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கக் கூடிய இடங்களை அடையாளப்படுத்திய பின்னர் வருடத்தில் ஒரு தடவையாவது முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினால் அனுகூலமான பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என வணிகர் கழகப் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஆளுநர் அதற்கான முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

## மாவீரர்...

ஆதரிக்கும் வகையில் செயற்பட்டவர்கள் இனவாத அடிப்படையில் அந்த நிகழ்வை வெளிப்படுத்த விளைந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் உரிய சட்டங்களின் அடிப்படையில் கைதுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் கடந்த 27ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை அடுத்து தென்னிலங்கையில் அநுர குமார அரசாங்கம் இந்த நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு அளித்துள்ள சுதந்திரமான தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உள்ளது என்று தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் தீவிரமான கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் போரின்போதும், அசாதரண சூழல்களின்போது உயிரிழந்தவர்களை நினைவுகூர முடியும். அதற்கு நாங்கள் தடைகளை ஏற்படுத்தப் போவதில்லை என்பதை முற்கூட்டியே அறிவித்திருந்தோம்.அந்த வகையில் வடக்கு-கிழக்கு மக்கள் அமைதியான முறையில் தமது அன்புக்குரியவர்களை நினைவேந்தி னார்கள்.

தற்போதைய நிலையில் தேசிய பாதுகாப்பு உயர்ந்த நிலையில் உள்ளது. அதற்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மனோவுக்கு உறுதியாகியது தேசிய பட்டியல் எம்.பி. பதவி!



கொழும்பு, டிசெ. 02

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் உறுதியாகியுள்ளது.

மனோ கணேசன் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோருக்கு தேசியப் பட்டியல் வாய்ப்பை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முடி வெடுத்துள்ளது.

எஞ்சிய இரு தேசியப் பட்டியல் ஆசனங்களை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் அடுத்து வரும் ஓரிரு நாட்களுக்குள் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என தெரியவருகின்றது. (அ)

# அரசியல் தீர்வு குறித்து அநுர அரசு மௌனம்!

### ஐக்கிய சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 02

**“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மற்றும் இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு என்பன தொடர்பில் தனது கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி ஏன் தெளிவுபடுத்தவில்லை. இது தொடர்பில் உரிய விளக்கம் அவசியம்.” - என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. எனினும், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் அது பற்றி ஒரு வார்த்தையேனும் கூறப்படவில்லை.

அத்துடன், தேசிய இனப்பிரச்னைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றியும் அவர் விவரிக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் முன்னோக்கி செல்லும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் தேர்தலுக்கு முன்னர் இந்த விடயத்தைக் குறிப்பிடவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என்றே கூறினர். ஆனால் தற்போது ரணிலின் வழியிலேயே செல்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கைப்பாவையாக தேசிய மக்கள் சக்தியும் மாறியுள்ளது என்றே கூறவேண்டும்.

அதேவேளை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தமது பதவி நிலைக்குரிய பணியை முறையாக செய்யவில்லை. அவரும் முதுகெலும்பற்ற ஒரு தலைவர்தான். தேசியப் பட்டியல் பிரச்னையைக் கூட தீர்த்துக்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றார் - என்றார். (அ)

## சீரற்ற வானிலை; 17 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 02

சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்வடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அண்மைக்காலமாக நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக 24 மாவட்டங்களில் 53, 888 குடும்பங்களைச் சேர்ந்த 1,43,726 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி 45, 418 குடும்பங்களைச் சேர்ந்த 116, 209 பேர் உறவினர் வீடுகளிலும், 8470 குடும்பங்களைச் சேர்ந்த 27,517 பேர் 229 பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 103 வீடுகள் முழுமையாகவும் 2635 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக, 09 மாவட்டங்களில் உள்ள 72 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு தொடர்ந்தும் அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விடுதலைப் புலிகள் தலைவரின் புகைப்படத்தை முகநூலில் பதிவிட்ட இளைஞர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசெ. 02

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் புகைப்படத்தை முகநூலில் பதிவிட்டதாக கைதான இளைஞரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், குறித்த இளைஞரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

## நெருக்கடிக்கு உள்ளாகிய இறைவரி திணைக்களம்!

கொழும்பு, டிசெ. 02

2024 நவம்பர் 30 காலக்கெடுவுக்கு முன்னர் தங்கள் வரிக் கணக்கை தாக்கல் செய்ய முயற்சித்தவர்களின் கடைசி நிமிட அவசரம் காரணமாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நெருக்கடியை சந்தித்துள்ளது.

இணையத்தின் ஊடாக ஒரே நேரத்தில் 16,000 பேர் உள்நுழைந்தபோது இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டது.

குறைந்த ஆற்றல் கொண்ட கணினிகளின் மூலம் உள்நுழைந்தோர், ஒரே நேரத்தில் பரிவர்த்தனைகளை செய்ய முடியாமல் சிரமப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல முறை முயற்சித்த பின்னர், தமது கணினிகள் செயலிழந்துவிட்டதாகவும் பலர் முறையிட்டுள்ளனர்.

எனினும், தாக்கல் செய்யும் செயல்முறையை மீண்டும் தொடங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோதும், அவையும் வெற்றி பெறவில்லை என்றும் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, சில பகுதிகளில் மின்சாரம் இல்லாததால், இணைய முறையை அணுக முடியாத நிலையில் பலர் சிரமங்களுக்கு உள்ளானதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வருமானக் கணக்கைத் தாக்கல் செய்வது கட்டாயமாக இணையம் மூலமாகவே செய்யப்பட வேண்டும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்திருந்தது.

அதேநேரம் ஆணையாளரிடம் முறையீடு செய்வதன் மூலம் கைமுறையாக தாக்கல் செய்ய சிறப்பு அனுமதி பெறவேண்டும் என்றும் திணைக்களம் தெரிவித்திருந்தது. (அ)

## பஸ் கட்டணம் மாறாது!

கொழும்பு, டிசெ. 02

டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் பஸ் கட்டணத்தினை மாற்றமின்றி பேணுவதற்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய டீசல் விலை அதிகரிப்புக்கேற்ப பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்

இது குறித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவிக்கையில்-

மாதாந்த எரிபொருள் விலைசூத்திரத்தின் பிரகாரம் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது பாவனைக்கு பெறப்படும் ஓட்டோ டீசல் 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.கடந்த மாதம் விலை திருத்தத்தின் போது டீசல் விலை குறைக்கப்பட்டது. அதனால் நாம் பஸ் கட்டணத்தினையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். இம்முறை டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் நாம் பஸ் கட்டணத்தில் எந்தவித மாற்றத்தினையும் மேற்கொள்ளாதிருக்க தீர்மானித்துள்ளோம்.

பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது. வாகன உதிரிப்பாகங்களின் விலை தொடர்ந்தும் அதிகரித்த விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது. பாரிய சிக்கல்களுக்கு மத்தியிலேயே நாம் பஸ் சேவையினை முன்னெடுத்துவருகின்றோம். தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் தொடர்பாக நாம் பல்வேறு தடவைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம் - என்றார். (அ)

## சுதந்திர தின விழாவில் பங்கேற்க வெளிநாட்டு தூதர்களுக்கு அழைப்பு

கொழும்பு, டிசெ. 02

இலங்கைக்கான 9 புதிய தூதுவர்களை சுதந்திர தின விழாவில் பங்கேற்குமாறு வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில், புர் கினா பாசோ, போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, அஜர்பைஜான் குடியரசு, ஜோர்ஜியா, பெலாரஸ் குடியரசு, ஆர்மீனியா குடியரசு, ஸ்பெயின் இராச்சியம், கொங்கோ குடியரசு மற்றும் கினியா குடியரசு ஆகிய நாடுகளுக்கான புதிய தூதர்கள் கலந்துகொண்டனர்.

புதிய அரசுக்கு வாழ்த்து தெரி வித்த அந்த தூதர்கள், அரசின் பணி ஒழுங்கை பாராட்டினர்.

மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கையின் மறுமலர்ச்சிக்கு முன்பை விட வலுவான ஆதரவை வழங்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

உத்தியோகபூர்வ சந்திப்புக்கு வந்திருந்த இராஜதந்திரிகள், இலங் கையுடனான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் அந்நாடுகளில் தூதரகங்களை நிறுவுவதற்கும் விருப்பம் தெரிவித்தனர்.

இலங்கையுடனான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்க புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்ளவும் அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். (அ)

## மின் கட்டண திருத்த யோசனை 6ஆம் திகதி கையளிக்கப்படும்!

கொழும்பு, டிசெ. 02

மின் கட்டணத் திருத்த யோசனையை எதிர்வரும் 6ஆம் திகதி இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் கையளிப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதற்கான தயாரிப்பு பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளர், பொறியியலாளர் ஏ.டி.கே. பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள முறைமைக்கு அமைவாக 6 முதல் 11 வீதம் வரையான மின் கட்டண குறைப்பு யோசனையை இலங்கை மின்சார சபை இதற்கு முன்னர் சமர்ப்பித்திருந்தது.

அதனை நிராகரித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 2025ஆம் ஆண்டு முதல் 6 மாதங்கள் தொடர்பில் ஆராய்ந்து கட்டணத் திருத்த முன்மொழிவை மறுசீரமைக்க வேண்டும் என தெரிவித்திருந்தது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org